# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 564 / 2016. |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 2 |
| Name | : அம்மவாசி. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.12.2023.

\- - - - - - -

1 முதல் 7 எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது எழுமலை காவல் நிலையத்தில் ஆய்வாளருக்கு ஓட்டுநராக பணியாற்றிவருகிறேன். சம்பவத்தின்போது, எம். கல்லுப்பட்டி காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராக பணிபுரிந்துவந்தேன். கடந்த 29.08.2016 ஆம் தேதி, இரவு சுமார் 8 மணியளவில் சார்பு ஆய்வாளர் சங்கையா அவர்கள் போன் மூலம் வந்த தகவலின்பேரில், டி. பாறைப்பட்டி முதல் பேரையூர் ரோட்டில் துல்லுபட்டி நாயக்கனூரைச் சேர்ந்த சந்திரன் என்பவர் தோட்டத்தில் சட்ட விரோதமாக ஒரு கும்பல் வேலை செய்வதாக தகவல் வந்தன்பேரில், சார்பு ஆய்வாளருக்கு உதவிக்காக என்னையும்,

தலைமைக் காவலர் செல்வம், முதல் நிலைக் காவலர் வினோத், முதல் நிலைக் காவலர் திருப்பதி ஆகியோர்கள் அழைத்து சம்பவத்திற்குச் சென்றார். சம்பவத்தில் போய்ப் பார்த்தபோது, முகம் தெரிந்த மாரியப்பன், சந்திரன், குமார் அவர்களுடன் பாண்டிச்சேரி, தருமபுரி, திருப்பங்குன்றத்தைச் சேர்ந்தவர்கள் மொத்தம் 7, 8 பேர்கள் இருந்தார்கள். அவர்கள் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு அருகாமையில் கார்பன் சீட், காடாத் துணி, பேண்டேஸ் ரோல், பாலிஸ் டப்பா, ரப்பர் சீட்டு ஆகியவை இருந்தன. அவர்கள் தவறான எண்ணத்தோடு போலியாக கலசம் தயாரிப்பதற்கு இருந்ததாக தெரியவந்தது. அத்திபட்டி ஆர்.ஐ. கருப்பையா மற்றும் துல்லுகுட்டிநாயக்கனூரைச் சேர்ந்த தலையாரி பாலு ஆகியோர்கள் முன்னிலையில் மாரியப்பனிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அதன்பின்னர், காவல் ஆய்வாளருக்கு தகவல் சொல்லி, அங்குள்ள பொருட்களை கைப்பற்றி காவல் நிலையம் கொண்டுசென்றோம். இண்டிகா கார் மற்றும் 2 இருசக்கர வாகனத்தையும் கைப்பற்றி காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றோம். அதன்பின்னர், காவல் ஆய்வாளர், சார்பு ஆய்வாளர் ஆகியோர்கள் வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தாரகள்.

<u>குறுக்கு விசாரணை -</u>

காவல் நிலையத்தில் சம்பவ இடத்திற்கு என்னுடன் வந்த டீம் காவல் நிலையத்தில் வெயிட்டிங் இருக்கும்போது, சார்பு ஆய்வாளர் உதவி கேட்டதன்பேரில் நாங்கள் மொத்தமாக சம்பவ இடம் சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் இருசக்கர வாகனத்தில் சென்றோம். நானும் அ.சா.1 செல்வமும் ஒரு பைக்கில் சென்றோம். அந்த பைக் செல்வத்தின் பைக். மற்றவர்கள் எப்படி வந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான்

பார்க்கும்போது எதிரிகள் மோட்டார் ரூமில் பேசிக்கொண்டிந்தார்கள் என்றால் வெளியில்தான் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசிக்கொண்ட விபரம் எனக்குக் கேட்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் ரோந்துக்கு செல்வதற்கு முன்னர் காவல் நிலையத்தில் உள்ள ஜி.டி.யில் பதிவு செய்யப்பட்டதா என்றால் எனக்குத் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக நானும் சென்றதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். அத்திப்பட்டி எங்கள் காவல் நிலையத்திற்குட்பட்டது அல்ல என்றால் சரியல்ல. அத்திப்பட்டிக்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரமிருக்கும் என்றால் சுமார் 9 கிலோ மீட்டர் இருக்கும். 13 கிலோ மீட்டர் வரும் என்றால் தவறு. காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்குச் செல்ல நிறைய ஊர்களை கிராஸ் செய்துதான் போகவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு நாங்கள் ரோந்து செல்லும்போது அனைவரும் சீருடையில்தான் சென்றோம். எங்களைப் பார்த்ததும் எதிரிகள் ஓட முயற்சி செய்தார்களா என்றால் முயற்சித்தார்கள். நாங்கள் சுற்றிவளைத்துப் பிடித்துவிட்டோம். யார் யார் எந்த திசையில் எவ்வளவு தூரம் ஓடினார்கள் என்றால் ஞாபகமில்லை. நான் சம்பவம் இடம் சென்றபோது இரவு 8 மணியிருக்கும். ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்தார். அவர் வந்த நேரம் ஞாபகமில்லை. ஆய்வாளர் சம்பவ இடத்தில் வைத்து எதிரிகளை விசாரித்தார் என்றால் சரிதான். ஆய்வாளர்தான் எதிரிகள் கைது குறித்து கைதுக் குறிப்பாணை தயார் செய்தார் என்றால் எனக்குத் தெரியாது. சம்பவ இடத்தில் என்ன என்ன ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது என்ற விபரம் தெரியாது என்றால் சம்பவ இடத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி தயாரிக்கப்பட்டது. எதிரி மாரியப்பனிடம் ஆய்வளார் சம்பவ இடத்தில் வைத்துதான் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி

ஆர்.ஐ. மற்றும் தலையாரி முன்னிலையில் வாங்கினார் என்றால் சரிதான். ஆய்வாளர் அவர்கள் அவரின் ஜீப்பில் வந்தார். எதிரிகளை ஆய்வாளர் அவருடைய ஜீப்பில் அழைத்துச் சென்றார் என்றால் ஞாபகமில்லை. எதிரிகளை நாங்கள் நாங்கள் நடந்தே அழைத்துச் சென்றோமா என்றால் ஞாபகமில்லை. ஆர்.ஐ கருப்பையா மற்றும் தலையாரி ஆகியோர்கள் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்றால் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். இருவரும் இருசக்கர வாகனத்தில்தான் வந்தார்கள். ஒன்றாக வந்தார்களா அல்லது தனித்தனியாக வந்தார்களா என்று ஞாபகமில்லை. மேற்படி சாட்சிகள் சம்பவ இடத்திற்கு வந்த நேரம் சரியாக ஞாபகமில்லை. எதிரிகளில் 3 பேர்களைத் தவிர மற்ற பெயர்கள் ஞாபகமில்லை. எதிரிகளின் இண்டிகா கார் மற்றும் இருசக்கர வாகனத்தில் ஆர்.சி. புக்கை ஆய்வாளர் கைப்பற்றினாரா என்றால் ஞாபகமில்லை. என்னை சம்பவ இடத்தில் வைத்து ஆய்வாளர் விசாரித்தார் என்றால் காவல் நிலையத்தில் வைத்துதான் என்னை விசாரித்தார். ஆய்வாளர் காவல் நிலையம் சென்றபின் சுமார் 1/2 மணி நேரம் கழித்து விசாரித்தார். நான் வாக்குமூலம் சொன்னதை ஆய்வாளர் எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். மற்றவர்களையும் ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் எழுதிக்கொண்டாரா என்றால் என்ன நடந்தது என்று கேட்டார். நான் எழுதிக்கொடுத்தேன். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். என்னுடன் டீமில் வந்த சக பணியாளர்களும் சார்பு ஆய்வாளர் சங்கையாவும் சம்பவ இடத்திற்கு சென்ற விபரத்திலிருந்து காவல் ஆய்வாளரிடம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பொருட்கள் கடைகளில் விற்கக்கூடிய பொருட்கள் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் காவல் ஆய்வாளர்

எழுதிக்கொண்டு எங்களிடம் கையொப்பம் வாங்கினார் என்றால் ஆய்வாளர் எழுதி வாங்கவில்லை. யார் எழுதினார்கள் என்று ஞாபகமில்லை. சொன் சொல்வதுபோன் நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், நான் முதல்விசாரணையில் சொன்னபடி எதிரி எங்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து, மேல் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 14.12.2023.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.